7. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.*

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவராக என்னை நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் குறித்த 28–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

8. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 14 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.19,98,16,000/– மற்றும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *119 கோடியே...*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மூலதனக் கணக்கில் ரூபாய்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வனத் துறை அமைச்சர், 119 கோடியே...*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*